இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு , நேற்று (07.06.2025) குறளகத்துடன் இணைத்து பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்வேறு போக்குவரத்து இணைப்புகளை ஒருங்கிணைத்து ரூ.822.70 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம், ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதிகளுடன் புதிதாக கட்டப்படவுள்ள பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் (Multi Model Facility) அமைப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமை! இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - தெருமுனைக் கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - சைதை சாதிக் - ரு.கீர்த்தனா சிறப்புரையாற்றினர்!

காஞ்சிபுரம், ஜூன். 8

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் (06.06.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6:00 மணியளவில் ஜமீன் ராயப்பேட்டை படவேட்டம்மன் கோயில் அருகில் பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

பகுதி துணை செயலாளர் கி.பூபதி மாமன்ற உறுப்பினர் என்.கண்ணன் வரவேற்புரை ஆற்றினர். மாவட்டப் பிரதிநிதி க. ரமேஷ், பகுதி கழக துணைச் செயலாளர்கள் எச்.பாஸ்கரன், மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி சந்திரசேகர் முன்னிலை வகித்தனர்.

தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக், தலைமை கழக இளம் பேச்சாளர் ரு.கீர்த்தனா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி, மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன், என்.நவீன், பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திரு நீர்மலை த.ஜெயக்குமார், பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி, பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் அண்ணாதுரை, பல்லாவரம் தெற்கு பகுதி செயலாளர், இ.எஸ். பெர்னார்ட், பல்லாவரம் தெற்கு பகுதி அவைத் தலைவர் வை.தா.ர.மூர்த்தி, செம்பாக்கம் வடக்குப் பகுதி அவைத் தலைவர் ஏ.வீரபத்திரன், பொருளாளர் கார்த்திக், வட்டக் கழகச் செயலாளர்கள் எம்.நாகராஜன், எம்.சார்லஸ், ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.மன்னாராஜா கண்ணா, ஜெ.வி.சந்திரசேகர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம்.ஐ.டி.எஸ்.விஜய், மாநகரப் பிரதிநிதிகள் சி.ஆர்.மதுரை வீரன், ஓ. தண்டபாணி, ஜி.ஜெகநாதன், பி.பாலச்சந்தர்,

மகளிரணி துணை அமைப்பாளர் ஆர்.கோமதி, செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் எல்.டில்லிபாபு மற்றும் துணை அமைப்பாளர்கள் சி.ஆர்.நரேஷ்குமார், கு.பிரபு, மு. அருண் கண்ணன், கி.சு.புனிதன், பா. யோகேஷ், கலைவாணன் மற்றும் 23 வது வட்டக் கழக நிர்வாகிகள் எ.கிருஷ்ணன், ஆ.கமலகண்ணன், த.சிகாமணி, எ. மனோன்மணி, த.திருக்குமரன், ச. தேவராஜ், ர.சண்முகம், மு.ஜானகிராமன், ஹரி, கோகுல் மற்றும் பொதுமக்களும் கழகத் தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர். 23 வது வட்டத்தைச் சேர்ந்த எம்.ஜெயபால் நன்றி கூறினார்.

நெல்லை மாவட்டம் – பாளையங்கோட்டையில் காயிதேமில்லத் பெயரில்

ரூ.100 கோடி மதிப்பில் நவீன நூலகம் அமைப்பதற்கான இடம்!

தமிழ்நாடு பொது நூலக இயக்குநர் பொ.சங்கர் ஐ.ஏ.எஸ். நேரில் பார்வையிட்டு ஆய்வு!

நெல்லை, ஜூன் 8-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை மாவட்ட தொழில் மையம் அருகில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் காயிதே மில்லத் நவீன நூலகம் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தினை தமிழ் நாடு பாடநூல் கழக மேலாண்மை இயக்குனர், பொது நூலக இயக்குனர் பொ.சங்கர்,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பல்வேறு மாவட்டங்களில் புதிய நூலகங்கள் கட்டப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மதுரையில் கலைஞர் நூலகம் கட்டப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் நூலகம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. அதனை தொடர்ந்து தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் நவீன நூலகம் கட்டப்படும் என்றும், அதற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்தும் அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் நூலகம் கட்டுவதற்கான இடத்தினை தேர்வு செய்தனர்.09.05.2025 திருச்சியில் நடைபெற்ற விழாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைய உள்ள நூலகத்திற்கு காயிதே மில்லத் நூலகம் என்று பெயர் சூட்டப்படும் என அறிவித்தார்கள்.

இந்த நூலகம் தென் மாவட்டங்களில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும், மாணவர்களும் பயன் பெறும் வகையில் அமைய உள்ளது.

கலைக்கல்லூரி, மருத்துவக் கல்லூரி,பொறியியல் கல்லூரி என அனைத்து மாணவர்களும், போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கும் பயனுள்ள வகையில் இந்த நூலகம் அமையும்.

இந்த நூலகத்தில் தரைத் தளத்துடன் கூடிய நான்கு தளத்தில் மினி திரையரங்கம், ஆடிட்டோரியம், மாற்றுத் திறனாளிகளுக்கென தனி அறை, மாநாட்டுக்கூடம் போன்ற எண்ணற்ற வசதிகளுடன்,1 லட்சம் புத்தகங்களுடன் இந்த நூலகம் அமைய உள்ளது.

இந்த நூலகம் அமைய உள்ள இடத்தினை தமிழ் நாடு பாடநூல் கழக மேலாண்மை இயக்குனரும் பொது நூலக இயக்குனருமான பொ.சங்கர், மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

நிகழ்வில் கண்காணிப்பு பொறியாளர் (கட்டிடங்கள்) ஸ்ரீதரன்,உதவி பொறியாளர் தினேஷ், மாவட்ட பொது நூலகர் மீனாட்சி சுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்குகிறார்!

126வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

முன்னிலை: கோ.கண்ணன்! டி.மோகன்ராஜ் தலைமை!

சென்னை, ஜூன் 8

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குப் பகுதி 126வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் 5-ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு இன்று (08.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் வன்னியம்பதி தெருவில் மாவட்ட பிரதிநிதி டி.மோகன்ராஜ் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

இதில் மயிலை கிழக்குப் பகுதி செயலாளர் எஸ். முரளி, 126வது வட்ட செயலாளர் கோ.கண்ணன் முன்னிலை வகிக்கிறார்.

வரவேற்பு: விஜய்வெங்கடேன், ச.கல்விநாதன், தா. ஜான்சன், வெள்ளை மோ. சுரேஷ், துளசி வாசு, உ.சரவணன், ரா.சகாதேவன். கு. பிரகாஷ், ர.கணேஷ், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மேலும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மயிலை கிழக்கு பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் 126வது வட்ட கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கோ.கோபி நன்றி கூறுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121வது வட்டக்கழகத்தின் சார்பில் வட்டக்கழக செயலாளர் டி.ராஜவேலு தலைமையில் ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை அருகில் பொதுமக்களுக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளரும்,மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு உணவு வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி செயலாளர், 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி,121வது வட்டகழக நிர்வாகிகளும் கலந்து கொன்டனர்.

என்.எல்.சி. தொ.மு.ச. நிர்வாகிகள்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைக்கப்பட்டு செயல்பட்டு வரும் என்.எல்.சி. தொ.மு.ச. (3463/SAT பேரவை இணைப்பு எண். 75) நிர்வாகிகள் தேர்தல் தொ.மு.ச. பேரவைச் செயலாளர் நா.தனசேகரன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நெய்வேலி என்.எல்.சி. வளாகத்தில் 05.06.2025 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சங்க நிர்வாகிகள் பட்டியல் வருமாறு:

தலைவர் – ஞா. ஞானஒளி
பொதுச்செயலாளர் – வீ. குருநாதன்
பொருளாளர் – A. அப்துல் மாஜித்
அலுவலகச் செயலாளர் – R.சீனிவாசன்
துணைத் தலைவர்கள் – 1) C. வீரப்பன் (Mine-I / Operation)
2) S.கணபதி (Mine-I / Operation North)
3) P. மோகன் (Mine-I / Operation South)
4) A.காதர்பாட்சா (Mine-I A)
5) G. கிருஷ்ணமூர்த்தி (Mine-II / Operation 1)
6) R.தியாகராஜன் (Mine-II / Operation II)
7) S.பரமசிவம் (Mine-II / North)
8) S.குருசாமி (Mine-II / South)
9) T.நீலமேகம் (TPS-1 &TPS-1 Expn./NTPL/MNTPS)
10) P.குமார் (TPS-2 & TPS-2 Expn.)
11) S.முருகேசன் (TPS-2 & TPS-2 Expn.)
12) G.செந்தில்குமார் (New Service Unit (NSU))
13) T.திருநாவுக்கரசு (New Service Unit (NSU))
14) K.வாசு (T.A. DEP. FIELD)
15) A.புண்ணியமூர்த்தி (Office -1)
16) K.வீராசாமி (Office-2)

இணைச் செயலாளர்கள்: 1) P.வேலுசாமி (Mine-1 Operation-1), 2) A.மூர்த்தி (Mine-1 Operation-2), 3) K.அறிவழகன் (Mine-1 South-1),) 4) R.அங்கமுத்துராஜா (Mine-1 South-2), 5) S.ரவீந்திரன் (Mine-1 North),6) B.முரளி (Mine 1A, OB / OPN), 7) K.பழனிவேல் (Mine-IA Lignite OPN), 8) R.விஜயகுமார் (Mine-II Operation-I), 9) G.ரவிச்சந்திரன் (Mine-II Operation-II), 10) S.ரவிச்சந்திரன் (Mine-II North), 11) P.பழனியப்பன் (Mine-II South),12) K.பாலமுருகன் (T.P.S.-1 & T.P.S.-1 Expn./ NNTPS), 13) J.ஜாகீர் உசேன் (T.P.S.-1 & T.P.S.1 Expn./NTPL), 14) P.K.முருகன் (T.P.S.-2 & T.P.S.-2 Expn.(MTCE)), 15) R.பழனிவேல் (T.P.S.-2 & T.P.S.-2 Expn.(OPN), 16) G.கரிகாலன் (All Canteen), 17) P.வாசுதேவன் (New Service Unit-1), 18) M.காதர்பாட்சா (New Service Unit-2), 19) M.ஆரோக்கியராஜ் (T.A. DEPT. (FIELD)),20) G.ராஜேந்திரன் (Office-1/JS1), 21) S.பிரகலாதன் (Office-1/JS2) 22) R.இளங்கோ (Office-2/JS1) 23) கோபா.சிற்றரசு (Office-2 FIELD OFFICE CARD JS2)

இடம்: கலைஞரகம்
நாள்: 07.06.2025

மு.சண்முகம், எம்.பி.
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகளுக்கான கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தாம்பரம் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., கலந்து கொண்டு உரையாற்றினர் . இந்நிகழ்வில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி.எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி. இளம்சுருதி, மேயர் க.வசந்தகுமாரி, கோ.காமராஜ்,மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன்,பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், ஆ.நடராஜன், இரா.சுரேஷ், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, வேல்முருகன், மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் பொதுக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட,மாநகர அணிகளின் நிர்வாகிகள், ஆகியோர் பங்கேற்றனர்.

எஸ்.ஜோயல் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா - எஸ்.வி.ரவிச்சந்நிரன் - வி.இ.மதியழகன் - ஜி.வெங்கடேசன் பங்கேற்பு!

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் சமூக வலைதளப் பயிற்சி பயிலரங்கம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் - ச.அரவிந்த்ரமேஷ் துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, ஜூன். 8

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் சமூக வலைதளப் பயிற்சி பயிலரங்கம் இன்று (08.06.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு, சோழிங்கநல்லூர் கைலாஷ் கார்டன் பழைய மகாபலிபுரம் சாலை நடைபெறுகிறது.

துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் சமூக வலைதளப் பயிற்சி பயிலரங்கத்தை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, சோழிங்கநல்லூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி, புனித தோமையர் மலை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள்,

பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

இறுதியாக நிகழ்வில் பகுதி அமைப்பாளர்கள் பெருங்குடி மா.ஸ்ரீகாந்த், கு.பாபு, சி.ஆர்.நாகேந்திரன், ஒகே.எஸ்.சதீஷ் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

இவ்வாறு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சித்தாலப்பாக்கம் ஜெ.இ.பாண்டியன், கா.வி.தியாகராஜன் ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளார்.

மாத்தூர் கா. தாமரைச்செல்வன் ஏற்பாட்டில் புழல் எம். நாராயணன் தலைமையில்

மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்ட தி.மு.க. சார்பில் செம்மொழி நாள் கொண்டாட்டம்!

1000 பேருக்கு அறுசுவை உணவு மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மாதவரம், ஜூன்.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 19 ஆவது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு, ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்ட திமுக சார்பில், வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாத்தூர் முதல் பிரதான சாலை சந்திப்பில் கழகக் கொடி ஏற்றி ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல்ஏ கலந்துகொண்டு கழக கொடி ஏற்றி அறுசுவை பிரியாணியை பொதுமக்களுக்கு வழங்கினார்.

மேலும் 19 ஆவது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு 11 இடங்களில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்பட்டது. மஞ்சம்பாக்கம் முன்னாள் கிளை செயலாளர் நினைவில் வாழும் எம். விஜயகுமார் இல்லம், மஞ்சம்பாக்கம் 200 அடி சாலை சந்திப்பு, மாத்தூர் ஒன்றாம் பகுதி, மாத்தூர் இரண்டாம் பகுதி, பொன்னியம்மன் கோவில் தெரு, lpf ஆட்டோஸ்டாண்ட், மாத்தூர் எம் எம் டி ஏ இரண்டாவது பிரதான சாலை பூங்கா,மாத்தூர் மூன்றாவது பிரதான சாலை, சின்ன மாத்தூர் சாலை சந்திப்பு கலைஞர் படிப்பகம், அருளானந்தம் நகர், சின்னமாத்தூர் மூன்றாவது பிரதான சாலை பேருந்து நிறுத்தம், அண்ணா சிலை ஆகிய இடங்களில் கழக கொடி ஏற்றி, கலைஞரின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. பொது மக்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் கே. காசிநாதன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே. ஏழுமலை, மாவட்ட பிரதிநிதிகள் பி. நிர்மல் குமார், வக்கீல் வி. கார்த்திகேயன், பி. துரைசாமி, எஸ். உதயகுமார், துரை தசரதன் வட்டக் கழக நிர்வாகிகள் ரகுவரன் திருமலை கார்த்திக், கோவர்த்தனன், ஹரி சுப்பிரமணி, கதிரவன், ர.விஜய் ஆனந்த், எம். என். அஜய் தென்னவன், ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், மகளிர் அணி சுகாசினி,சரஸ்வதி, அத்திகுளம் தேவி, கஸ்தூரி, பெரியநாயகி, சின்ன மாத்தூர் குகன், நாகராஜன், கங்காதரன், ஜானகிராமன், அண்ணாதுரை, ஐ சி எப் கே.விஜயகுமார், சோமு, சின்ன மாத்தூர் காசி ,மஞ்சம்பாக்கம் டில்லி, ஐ சி எப் சிவப்பிரகாசம், ஜிம் சீனிவாசன், மாத்தூர் அர்ஜுனன், கலைச்செல்வி, சுந்தரி, எஸ்தர் ராணி, முகமது முஸ்தபா, சந்தோஷ், குமார், மலர்மன்னன், எஸ். எஸ். கே. செல்வகுமார், வினோத் குமார், சிவராமன், குமார் உள்ளிட்ட ஏராளமான முன்னணியினர் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் ஏற்பாட்டில், 11 இடங்களில் கழக கொடி ஏற்றி ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு வழங்கினார். கவுன்சிலர் க. காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே. ஏழுமலை, பி. நிர்மல் குமார், வக்கீல் வி. கார்த்திகேயன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.